மதுரையில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கழகப் பொதுக் குழுவில் கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் பி.மூர்த்தி வெள்ளிச் செங்கோல் வழங்கினார்!

மதுரையில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கழகப் பொதுக்குழுவில் கழக இளைஞரணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, அமைச்சர் பி.மூர்த்தி, வெள்ளிச் செங்கோல் வழங்கினார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையேற்று சிறப்புரை!

குன்றத்தூர் மத்திய ஒன்றிய அவசர செயற்குழுக் கூட்டம்!

ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன் 2

குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (02.06.2025-திங்கட்கிழமை) மாலை 4 மணி அளவில், மாங்காடு மெயின் ரோடு சிக்கராயபுரம் பகுதியில் அமைந்துள்ள திருமுருகா திருமண அரங்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில் நிறு வனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், திருபெரும்புதூர் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ வந்தே மாதரம், குன்றத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம், ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சுப்பிரமணி, வாசுகி, மகேஷ், வி.ஹரி, மா.பதி மேல்அழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சியறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, 2026 சட்டமன்றத் தேர்தல் பணி, கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் திரு முடிவாக்கம் இ. மணி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜூன் 3 – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை செம்மொழி நாளாக

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் நலஉதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை

காஞ்சிபுரம், ஜூன்.2,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான ஜூன், 3 ஆம் தேதி அன்று செம்மொழி நாளாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் முன்னேற்றமே தனது வாழ்நாள் குறிக்கோள் என்ற சொல்லை மனதில் பதிய வைத்து, தனது 14 வயதில் திருவாரூர் வீதியில் தமிழ்மொழியைக் காக்க, இந்தி மொழியை எதிர்த்து, தமிழ்க் கொடியை கையில் ஏந்தி போர்ப்பரணியை பாடிய போர்வீரர், களப் பணியாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

தமிழ்நாட்டிற்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழிக்கு எத்திசையில் இருந்து எதிர்ப்புக் குரல் வந்தாலும் அக்குரலை நெரிக்கக் கூடிய வகையில் திறம்பட செயல்பட்டு 95 வயது வரையில் தமிழ் மொழியை தமிழ் நாட்டை, தமிழ் இனத்தை காத்த பெருமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

தமிழ்நாட்டிற்கு எத்தனை திட்டங்கள் ஒன்றா இரண்டா பட்டியலிட, அரசு பேருந்துகளை நாட்டுடைமையாக்கியவர், வங்கிகளை தேசியமயமாக்கிட ஆலோசனை வழங்கியவர், கிராமங்கள் தோறும் மின்சாரம், ஒவ்வொரு குடிசை வீடுகளுக்கும் ஒரு விளக்கு என்றவர், கண்ணொளி வழங்கியவர், கைரிக்ஷா ஒழித்தவர், தொழிநோயாளிகளுக்கு புது வாழ்வை ஏற்படுத்தியவர், மகளிர் சொந்தக் காலில் நிற்க மகளிர் சுய உதவிக் குழுக்கள், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியவர், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் ரூ7000 கோடியை ஒரே கையெழுத்தில் தள்ளுபடி செய்த விவசாயிகளின் தோழன், தொழிலாளர்களுக்கு மே 1 விடுமுறை தினமாக அறிவித்த தொழிலாளர்களின் பாதுகாவன், தொழிற்சாலைகளுக்கு 'சிப்காட் அமைத்தவர், குடிசைகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றியவர், மருத்துவக் கல்வி, தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்தவர், அருந்ததியினர், இஸ்லாமியர் களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கியவர், வள்ளுவர் கோட்டம், வான் புகழ் கொண்ட திருவள்ளுவருக்கு வான் உயர 133 அடி உயர சிலை அமைத்து அவரது புகழைய உலகரியச் செய்வதர், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி ஏழை எளியவரின் பசியைப் போக்கியவர். இப்படி என்னெற்ற திட்டங்களை தமிழ்நாட்டுக்காக தமிழ் மக்களுக்காக செயல்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பரிதிமாற் கலைஞர் அவர்களின் 150 ஆண்டு கால கனவு தமிழ் மொழிக்கு செம்மொழி அங்கிகாரம் கிடைக்க வேண்டும் என்பது அவரது கனவை தமிழ்க்கு செம்மொழி அங்கிகாரம் கிடைக்கச் செய்து நனவாக்கி தமிழ் மொழியை பார் போற்றச் செய்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நாளை (3.6.2025செவ்வாய்க்கிழமை) 102 வது பிறந்த நாள் ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ்மொழிக்கு செய்திட்ட செயல்களை, திட்டங்களை அவரது வழியில் செயல்படுத்தி வரும் நமது கழகத் தலைவர் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஜூன் 3 பிறந்த நாள், தமிழ் செம்மொழி நாள் என்று வரலாற்றில் சிறப்புக்குரிய அறிவிப்பினை அறிவித்தார்.

திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று, கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் நாளை செம்மொழிநாளாக, நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் கொண்டாடுவோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை, செம்மொழியின் பெருமையை எடுத்துச் சொல்லி சிறப்பாக கொண்டாடுவதோடு, காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் மாநகரம், நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர், வார்டு, கிளைகள் தோறும் கழகக் கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி, நமது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா.துரைராஜ் முன்னிலை!

சைதை ஜாபர்கான் பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

திருவுருவச் சிலைக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, மே 29-

சைதை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் ஏற்பாட்டில், 3.6.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு, ஜாபர் கான் பேட்டை, கங்கையம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணி யன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

மேலும் இந் நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன் சைதைமா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின் கந்தப்பன், ப.சுப்பிரமணி . தா.மோகன் குமார். எம்.எஸ்.ஹரிபாபு, சைதை சாதிக், வி.பி.ஜானகிராமன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கபிதாகௌதமன், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.மணிகண்டன், ஆர் கிருஷ்ணகுமார், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன், ராமச்சந்திரன், வி.மதி வாணன், என்.சிவமணி, த.மணி, கு.புகழ்வேந்தன். பொன். ஐஜெய்சிங், ஏ.ரவி, ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், எம்.எஸ்.மணி, என்.தீனதயாளன், வெ.புருஷோத்த மன், நரேஷ்குமார், பிரபு, விக்னேஷ், எஸ்.மல்லிகா, சரவணன், பாஸ்கர், இரா.சத்யா, எஸ்.அருண், மு.கதிரவன், பொ.பரத் குமார், பி.எல்.முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சசுந்தரம், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ.சுப்பிரமணி, இ.வரதன் மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், ஜி.ஏழுமலை,பிரகாஷ், டி.சுரேஷ் பாபு வி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமஅலி, என்.ராஜேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பாபு எல்லப்பன், சைதை திலீபன், மதிவாணன், வ.ராஜா, இ.விமல், கொடி.எல்.மணி, ஆர்.வி.நகர் பா.ராஜேஷ், ப.ராகுல் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை களக்காடு எல்லப்பன் செய்துள்ளார்.

கலைஞர்நகர் தெற்குப் பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102-வது பிறந்தநாள்!

பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிக்கை!

சென்னை,ஜூன்.2-

கலைஞர்நகர் தெற்கு பகுதி செயலாளர் கே. கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் அறிவுறுத்தல் படி, கலைஞர்நகர் தெற்கு பகுதி சார்பில் 03.06.2025 செவ்வாய் கிழமை அன்று 136,136அ, 137, 137அ, 137ஆ, 138, 138 அ வட்டங்களில் வட்ட செயலாளர்கள் பூக்கடை #ஆர். பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே.குமார், வழக்கறிஞர் சதீஷ் கண்ணன், அ.கதிரேசன், சோ.செந்தில்குமார், ஜம்புமுகன் ஏற்பாட்டில், பகுதி செயலாளர் கே.கண்ணன் என் முன்னிலையில் 50 இடங்களில் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்பு, சிற்றுண்டி வழங்கியும் கொண்டாட உள்ள இந்நிகழ்வுகளில் ஏஎம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், வடக்கு பகுதி செயலாளர் மு.ராசா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்ச்சிகளில் அந்தந்த வட்டத்திற்குட்பட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு கலைஞர்நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே. கண்ணன் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 102-வது பிறந்தநாள் விழா!

சைதை கிழக்குப் பகுதி அலுவலகத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு! பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் அறிவிப்பு

சென்னை, ஜூன் 2 -

சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாளை (03.06.2025 செவ்வாய்க்கிழமை) பகல் 11.00 மணிக்கு எண் 12, நெடுஞ்செழியன் தெரு, நேருநகரில் உள்ள சைதை கிழக்கு பகுதிக்கழக அலுவலகத்தில் வைத்து பகுதி செயலாளர் மண்டலக்குழு தலைவர் இரா.துரைராஜ் தலைமையில் தெற்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

நிகழ்ச்சியில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே பகுதியில் உள்ள மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள், வட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, நிர்வாகிகள் பாக இளைஞர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, நிர்வாகிகள் செயல் வீரர்கள் வீராங்கனைகள், பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் பகுதிச் செயலாளார் இரா.துரைராஜ் எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ. சீனிவாசன், சி.எஸ். லீலாவதி, ஆகியோர் இல்ல விழா திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் வாழ்த்தினார்கள் உடன் டாக்டர் வி.சி.ஆர்.குமாரன், வி.கிஷோர், சி.ஜே.செந்தில்குமார், , வீரமங்கலம் மா.ரகு, ஜி.எஸ்.கணேசன், ஜி சித்திக், கே.எஸ்.அசோக்குமார், ஷாம் சுந்தர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (01.06.2025) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவு,ஆய்வகம், உள் நோயாளிகள் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, மருந்தகம், சித்த மருத்துவ பிரிவு போன்ற மருத்துவ கட்டமைப்பு வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.